## 35. மிகைவெல் வயவை.*

*யாழ்மூரி.*

**மா**மலைச் செல்வியையொர் புறம் வைத்துயர் வெண்டிகழ்
        வரை யுறை யிறை யவ ரருளி னுய்யுநறுங்
கோமிளிர் வானவர்கள் பழிச் சிப்பணிந் தாம்வரங்
        கொள வுள கட வுள ரெனவி ளங்கியொண்மை
நாமகள் காமுறுமே ழிசைப் பூதக ணம்பல
        சரி கம பத நியென் றுரிய வணம்பாட
ஏமவு ளங்கனிந்து நடஞ் செய்குகன் மெய்யடி
        தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 1

**மை**ச்சல ராசிவளை நில மேவுப சுக்களை
        மறு புதை புக வயர் பிரம னார்சிரசிற்
கைச்சுமங் கொண்டுகுட்டித் திருக் காலுதை யுந்தருங்
        கரு ணையை யுள விறை பிறக யன்புரியும்
துச்சமி லாததவந் தனைக் கண்டவன் செய்யொரு
        தொழி லினை நனி யுத வியபி ரானெனவே
மெச்சிநி தங்குறைவி லருள் வேட்டவன் மெய்யடி
        தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 2

**எ**ரிதனி லேட்டையிட்டன் றெரி யாமலு மேடற
        லெதிர் செல வுமை மறை விபின மாக்கதவம்
இரிபற மூடிடவும் வள ராண்பனை பெண்பனை
        யென வமை யவும் விட மறவு மொருபுத்தன்

---

* *இம்முப்பத்தைந்தாந் திருப்பதிகநடை, திருஞானசம்பந்த சுவாமிகளது "மாதர் மடப்பிடியும்" என்றற்றொடக்கத்துத் திருப்பதிக நடையை யொத்திருத்தலின் அப்பதிகத்திற் கிடப்பட்ட யாழ் மூரி என்னும் பெயரே இத்திருப்பதிக ஒலிக்கும் இடப்படுவதாயிற்று. வயவை – வழி.*

**2. துச்சம்** = *அற்பம் ; வடசொல்.*

**3. "செலவுமை"** *என்னுந் தொடரில் ஐ = அழகு.*

*இத்திருப்பாட்டில் வருவிடயங்கள் திருஞானசம்பந்த சுவாமிகள் சரித்திரத்திலுள்ளவாறு கூறப்பட்டனவாம். சரித்திரநிலை வேறுபடின் நூலாசிரியர் பொறுப்பொன்று மின்றென்க.*

பெரியவு டம்பிறவும் பழ வத்திபெண் ணாகவும்
பணி னவர் பர சிறை பிரிய மோடுதந்த
விரிசுட ரானவடி வுடை வேலவன் மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 3

**அ**க்கினி வத்திரத்தான் கையின் மாண்டச கோதர
ரெழு வர்க டரு கென வடல்கொ ளம்பொன்றில்
அக்கண மேவரைந்து நம னுக்குவி டுத்தபின்
பவ ரொடு மற லியு மருகில் வந்துபிர
தக்கிண மாப்பரவு முயர் வுற்றவொர் வீரனின்
றலை வனொர் நிக ரறு சரவ ணப்பெருமாள்
மிக்கெழின் மேவியவிர் திருப் பங்கய மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 4

**ஊ**னுழை கன்மமுடை யுயிர்க் கூளியைக் கொள்ளைகொள்
வலி மலி மற லழி வுறவு தைத்தகழல்
வானவன் வேண்மகிமை தனைக் கோடிநூ றாண்டள
வறை தரி னுமு டிவு பெறுவ தின்றெனவோ
ரேனமி லம்பிகைமுன் சொன வேற்றம தற்குடை
யவ னெவ னவன் மயி லிவரு மீசனவன்
மீனுறழ் பொற்சதங்கை மிக வேங்கிடு மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 5

**எ**ண்டிசை யும்பெருமை நனி கொண்டவொர் தக்கனீ
ளெரி மக மதில் வசு விரவி யிந்துபருங்
குண்டைய ரன்றோழன் புனல் வேந்தனு யிர்ப்புநி
ருதி சத மக னில குசனி மூலையிறை
சண்டன ருந்தமனெண் கண னாதிபல் பண்ணவர்
தர மற வடன் மற லதுவி ளைத்தமகா
மிண்டனு நானெனவே மிளிர் வேலவன் மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 6

***6. வசு*** = *அக்கினி.*

***அருந்தமன்*** = *விட்டுணு ; விட்டுணு பெயர் கூறுமிடத்தே "அருந்தமனென்பது மாங்கவன் பெயரே" என்னும்* ***பிங்கலந்தை.***

**எ**ண்ணறு சிட்டிபுரி விதி தன்னையுந் தண்டுழா
யிறை யையு நுதல் விழி யெரியி னாலெரித்தவ்
வெண்பலி யைப்பூசி முழு வென்பொடு வெண்டலை
மிலைந் தலைந் தெழுந் துழன் றிறுதிந டம்புரியும்
கண்ணொரு மூன்றுடைய கறைக் கண்டனு நானென
மிளிர் சர வண பவன் கணித மில்புகழை
விண்ணவ ரும்வியக்கத் துதித் தன்னவன் மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 7

**சீ**றதி சீற்றமுடைக் கிர வுஞ்சனென் போனெடுந்
திரி புர மென வெழ வவையு ளானைமுகன்
கூறரு மூன்றசுர ரெனத் தோன்றிய போதொரு
குறு நகை கொடு பொடி படவெ ரித்தவர்கள்
மாறுப டுந்தொழிலாற் செயு மாயமெ லாங்கெடும்
வகை பணி யுயி ரையு நொடியி லுண்டகுகா
வேறுப டாமலருள் புரி யென்றவன் மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 8

**ம**ட்டில டங்காத வண்ட பிண்டச ராசர
வகை முழு வது மவ னுருவி ருந்தநிஜம்
தட்டவி லோசனத்திற் சத யூபனுக் கன்றருள்
புரிந் தவன் பெரும் பயந் தணிய ஞாங்கரெறிந்
திட்டகு கேசனெனுஞ் சிவ னண்ணலை யெண்ணிநின்
றர ஹர சிவ சிவ வெனவி ளம்பியவன்
விட்டக லாதவண மவன் றுய்யநன் மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 9

**தே**ங்கிள ரண்டநிரை களைத் தன்பெருங் கர்ப்பமுட்
சிறு சிறு துக ளென நிறுவி யங்ஙனமே
தாங்கியு மப்பொருளி லுயிர் போலவி ராவியே
தகு குணங் குணி யெனச் சமைய வேவிரித்தும்

ஓங்கிடு மக்குணமொன் றிலி யென்னவு முள்ளதே
வொரு குக னென வரு ணகிரி யுன்னிமகா
வீங்கல ணைந்தபடி யவன் றுய்யநன் மெய்யடி
தொழு தெழு மறி வுளர் மிகையை வெல்லுவரே. 10

மன்மத வருடம் ஆவணி மாதம் 27ஆம் தேதி புதவாரம்.